මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: CGO/ASM/Policy/Cir/ (VOL III)
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 24.08.2023

ஆதன முகாமைத்துவ சுற்றுநிருப இல. **06/2023**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் மற்றும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்
அரச வங்கிகள் மற்றும் அரசுடமை கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்கள் முகாமைத்துவம்**
**பொதுத்துறை நிறுவனங்களுக்கான நிகழ்நிலை நிதி அல்லாத சொத்து முகாமைத்துவ முறைமை (Non-Financial Assets Management System -NFAMS) அறிமுகம் - வாகன தொகுதி**

பொதுத்துறை நிறுவனங்களின் நிதியல்லாத ஆதன முகாமைத்துவத்துக்கான நிகழ்நிலை மையப்படுத்தப்பட்ட விரிவான தரவுத்தளத்தை நிறுவ, 2017 ஜூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை மூலம் தொடங்கப்பட்ட நிகழ்நிலை நிதியல்லாத ஆதன முகாமைத்துவ முறைமையினை (NFAMS) கொம்ப்றோலர் ஜெனரல் அலுவலகம் அறிமுகப்படுத்துகிறது.

02. இந்த ஏற்பாடானது அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துகளின் நிருவாகத்தை நெறிப்படுத்துவதையும், இந்தச் சொத்துக்களின் தகவல்களைப் பதிவுசெய்தல் மற்றும் புகாரளிப்பதில் பொறுப்புணர்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இந்த அமைப்பு ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் தங்களுடைய சொத்துகளின் இருப்புப் பதிவுகளை இணைய அடிப்படையிலான தளத்தில் வைத்திருக்கவும், அவர்களின் ஆதன முகாமைத்துவத்துக்குத் தேவையான அறிக்கைகளை உருவாக்கவும் உதவும்.

03. இந்த முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கான முதல் கட்டமாக, பொதுத்துறை நிறுவனங்கள் (அரசாங்க நிறுவனங்கள், பொது தொழில்முயற்சிகள் மற்றும் மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும்) வசமுள்ள வாகனங்களின் அத்தியாவசிய விவரங்களைப் பதிவு செய்வதில் கவனம் செலுத்தும் வகையில், 2023 செப்டம்பர் 01 ஆந் திகதியிலிருந்து வாகனத் தொகுதி செயற்படுத்தப்படும்.

04. அதன்படி, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பயனர் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலின்படி, அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்களும் வாகனங்கள் பற்றிய தகவலை நிதி அல்லாத சொத்து முகாமைத்துவ முறைமையில் (Non-Financial Assets Management System -NFAMS) பதிவு செய்ய வேண்டும்.
இந்த அமைப்பில் தரவு உள்ளீட்டு செயற்பாட்டில், பின்வரும் முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்துவது அவசியமாகும்:

i. **பயன்படுத்துநர் பதிவு:** இத்துடன் இணைக்கப்பட்டுள்ள CGO/NFAMS/G/01 என்ற படிவத்தை முறையாக பூரணப்படுத்தி NFAMS இல் பதிவேற்றுவதன் மூலம், தரவு நிரற்படுத்தல் அலுவலர் (Data Entry Officer) ஒருவரையும் தரவு சரிபார்ப்பு அலுவலர் (Data Verification Officer) ஒருவரையும் (தரவு சரிபார்ப்பு அலுவலர் பதவிநிலை அலுவலரொருவாரக இருத்தல் வேண்டும்) நிறுவனத்தின் தலைவர் பெயர்குறித்து பரிந்துரைத்தல் வேண்டும்.

ii. **நிறுவன முகாமைத்துவம்:** பின்வரும் விடயங்களுக்கு, கொம்ப்றோலர் ஜெனரலின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்;

அ. துணை நிறுவனம் சார்பாக தரவுகளை பதிவு செய்வதற்கு பிரதான நிறுவனம் பொறுப்பாக இருக்கும் போது.

ஆ. பிரதான நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட தரவு சரிபார்ப்பு அதிகாரி, துணை நிறுவனம் தொடர்பான தரவைச் சரிபார்க்க வேண்டும்.

iii. **பதிவு செய்யப்பட வேண்டிய வாகனங்கள்:**

அ. மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய அல்லது தேவைப்படாத அனைத்து வாகனங்களும்,

ஆ. சட்டப்பூர்வ உரிமையைக் கருத்திற் கொள்ளாமல், தற்போது அந்தந்த நிறுவனத்தின் வசமுள்ள அனைத்து வாகனங்களும்,

இ. இயங்கும் நிலையிலுள்ள அனைத்து வாகனங்களும் பயன்படுத்தப்பட்டதா இல்லையா, மற்றும்

ஈ. மேற்குறித்த (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளின் படி வாகனங்கள் இல்லை என்றால், பயனர் கையேட்டிலுள்ள பிரிவு 4.1.2 ஐப் பார்க்கவும்.

iv. **வாகனம் தொடர்பான தரவுப் புலங்கள்:** வாகனத்தின் அடிப்படைத் தகவலைப் பதிவுசெய்த பிறகு, NFAMS இல் உள்ள நெவிகேஷன் பெனலில் "சொத்துக்களைச் சேர்" - "Add Asset" அம்சத்தைப் பயன்படுத்தி பின்வரும் தரவுப் புலங்கள் நிரப்பப்பட வேண்டும்:

| | | |
|---|---|---|
| அ. | மதிப்பீட்டு விவரங்கள் | NFAMS இல் கட்டாய தரவுப் புலம் |
| ஆ. | உரித்து மாற்றல் விவரங்கள் | ஒரு வாகனத்தை மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு முன் NFAMS இல் மாற்றல் செயன்முறையை முடிக்க வேண்டும். |
| இ. | அகற்றல் விவரங்கள் | வாகனத்தை அப்புறப்படுத்திய உடனடுத்துப் பின்னர் நிரப்பப்படுதல் வேண்டும். |
| ஈ. | எரிபொருள் திறன் | அந்தந்த நிறுவனத்தின் வாகனக் குழுமத்தின் திறமையான நிர்வாகத்தை எளிதாக்குவதற்கு NFAMS இல் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள் உரிய முறையில் நிரப்பப்படல் வேண்டும். |
| உ. | காப்பீட்டு விவரங்கள் | |
| ஊ. | பராமரிப்பு விவரங்கள் | |
| எ. | விபத்து விவரங்கள் | |

v. **நிகழ் நேர தரவு அறிக்கை:**

அ. 2023 செப்டம்பர் 01 அன்று வசமுள்ள அனைத்து வாகனங்களும், 2023 டிசம்பர் 31 இற்கு முன் NFAMS இல் பதிவு செய்யப்படல் வேண்டும்.

ஆ. 2023 செப்டம்பர் 01 இற்குப் பின்னர் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் கையகப்படுத்தல் முடிந்த நாளில் / குத்தகை / வாடகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு முடிந்த நாளில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

இ. வாகனத்தின் அடிப்படைத் தகவல்களில் ஏற்படும் அனைத்து மாற்றங்களும் உரிய நேரத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

05. மேலுள்ள பந்தி 04 (iii), (iv) மற்றும் (v) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, முந்தைய ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை அனைத்து வாகனங்களின் தகவல்களையும் உறுதிப்படுத்தும் உறுதிப்படுத்தலை அனைத்து பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்களும் சமர்ப்பிக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள CGO/NFAMS/G/02 படிவத்தினை முறைப்படி பூர்த்தி செய்து ஸ்கேன் செய்யப்பட்ட நகலை அடுத்த ஆண்டு சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் cgo@mo.treasury.gov.lk என்ற மின்னஞ்சல் மூலம் கொம்ப்றோளர் ஜெனரலுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

06. அரசாங்கத்தின் நிதியல்லாத ஆதன முகாமைத்துவத்துவம் தொடர்பான அனைத்து சுற்றறிக்கைகள் மற்றும் இணைப்புகளை www.treasury.gov.lk இல் உள்ள கொம்ப்றோளர் ஜெனரல் அலுவலக இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

07. மேலதிக விபரங்களுக்கு: nfams@mo.treasury.gov.lk என்ற மின்னஞ்சலினூடாக தொடர்பு கொள்ளவும்
தொலைபேசி: 011-2151452, 011-2151425

08. இது தொடர்பில் உங்களது ஒத்துழைப்பு பெரிதும் மெச்சத்தக்கது.

**ஒப்பம்/ கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர**

பிரதிகள்:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்